# திருக்குறள் - பண்புடைமை

## வினா விடைகள்

### 1. திருக்குறள் குறிப்பு வரைக.

- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது.
- இந்நூலில்133 அதிகாரங்கள், 1330 குறள்கள் உள்ளன.
- உலகில் உள்ள அனைவரும் பின்பற்றத்தக்க சிறந்த கருத்துகளைக் கொண்டதால் உலகப் பொதுமறை எனப்படுகிறது.

### 2. திருவள்ளுவரின் சிறப்புப் பெயர்கள் யாவை?

- தேவர்
- நாயனார்
- தெய்வப்புலவர்
- செந்நாப்போதார்
- பெரு நாவலர்
- பொய்யில் புலவர்
- மாதானுபங்கி
- முதற் பாவலர்

### 3. பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் யாவை?

பண்புடையவராக வாழ்வதற்குரிய நல்ல செயல்கள் அன்புடைமை, உயர்ந்த குடியில் பிறத்தல் ஆகியனவாகும்.

### 4. மரம் போன்றவர் எனத் திருக்குறள் யாரைக் குறிப்பிடுகிறது?

அரத்தைப் போன்ற கூர்மையான அறிவுடையவராக இருந்தாலும், மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவரை மரம் போன்றவர் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது.

### 5. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எவ்வாறு பயனில்லாது போகும்?

தூய்மையற்ற பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவது போல, பண்பில்லாதவன் பெற்ற செல்வம் பயனில்லாது போகும்.